

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.5.2025) திடீர் மறைவெய்திய மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி J. சத்ய நாராயண பிரசாத் அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று, அவரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன், மாண்பமை உயர் நீதிமன்ற நீதிபதி ஆர். சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர் ஜெ. ரவீந்திரன் ஆகியோர் உள்ளனர்.

### மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க.

# நாடு போற்றும் நான்காண்டு - தொடரட்டும் பல்லாண்டு ஆட்சியின் சாதனை விளக்க பொதுக்கூட்டங்கள்!



## மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் அறிவிப்பு!

மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க.விற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பகுதி கழகங்களில் கழகத் தலைவர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் கீழ்க்கண்டவாறு நடைபெறும்.

| சட்டமன்ற தொகுதி | ஒன்றிய நகர பகுதி கழகங்கள் | பொதுக்கூட்டம் நடைபெறும் இடம் | சிறப்புபேச்சாளர்கள் |
|---|---|---|---|
| 08.05.2025 வியாழக்கிழமை | | | |
| திருமங்கலம் | தே.கல்லுப்பட்டி கிழக்கு ஒன்றியம் | புளியம்பட்டி | எஸ்.எஸ்.பழனி மாணிக்கம் |
| திருமங்கலம் | திருமங்கலம் மேற்கு ஒன்றியம் | கே.புளியங்குளம் | போடி. எஸ்.எஸ்.கலைச்செல்வன் |
| திருப்பரங்குன்றம் | திருப்பரங்குன்றம் மேற்கு ஒன்றியம் | தனக்கம்குளம் | கம்பம் பெ.செல்வேந்திரன் |
| திருப்பரங்குன்றம் | திருப்பரங்குன்றம் வடக்கு பகுதி | பேருந்து நிலையம், திருப்பரங்குன்றம் | சங்கீதா இரா.கண்ணன் |
| உசிலம்பட்டி | உசிலம்பட்டி வடக்கு ஒன்றியம் | உத்தப்பநாயக்கனூர் | போடி பா.காமராஜ் |
| உசிலம்பட்டி | சேடபட்டி மேற்கு ஒன்றியம் | பேரையம்பட்டி | கு.மாரிமுத்து |
| 09.05.2025 வெள்ளிக்கிழமை | | | |
| திருமங்கலம் | திருமங்கலம் கிழக்கு ஒன்றியம் | கப்பலூர் | எழும்பூர் மோ.கோபி |
| திருப்பரங்குன்றம் | திருப்பரங்குன்றம் தெற்கு பகுதி | திருநகர் 2 ஸ்டாப் | கம்பம் பெ.செல்வேந்திரன் |
| உசிலம்பட்டி | உசிலம்பட்டி மேற்குஒன்றியம் | தொட்டப்ப நாயக்கனூர் | கு.மாரிமுத்து |
| 10.05.2025 சனிக்கிழமை | | | |
| திருமங்கலம் | தே.கல்லுப்பட்டி வடக்கு ஒன்றியம் | வன்னிவேலம்பட்டி | போடி. எஸ்.எஸ்.கலைச்செல்வன் |
| திருமங்கலம் | திருமங்கலம் நகரம் | ஜவஹர்நகர்ரவுண் டான | எஸ்.எஸ்.பழனிமாணிக்க ம் |
| திருப்பரங்குன்றம் | திருப்பரங்குன்றம் கிழக்கு ஒன்றியம் | சிலைமான் | போடிபா.காமராஜ், ச.செளமியா |
| உசிலம்பட்டி | செல்லம்பட்டி தெற்கு ஒன்றியம் | கருமாத்தூர் | கு.மாரிமுத்து, அசாருதீன் |
| 11.05.2025 ஞாயிற்றுகிழமை | | | |
| திருமங்கலம் | தே.கல்லுப்பட்டி தெற்கு ஒன்றியம் | மோதகம் எம்.சுப்புலபுரம் | எஸ்.எஸ்.பழனிமாணிக்க ம் |
| திருமங்கலம் | கள்ளிக்குடி வடக்கு ஒன்றியம் | வீரப்பெருமாள்புறம் | போடி. எஸ்.எஸ்.கலைச்செல்வன் |
| திருமங்கலம் | திருமங்கலம் தெற்கு ஒன்றியம் | பூசலப்புரம் | எழும்பூர்மோ.கோபி |
| உசிலம்பட்டி | உசிலம்பட்டி நகரம் | கவண்டன்பட்டி வார்டு 2324 | சேப்பாக்கம் வே.பா.பிரபாகரன் |
| உசிலம்பட்டி | உசிலம்பட்டி தெற்கு ஒன்றியம் | எருமார்பட்டி | முகவைக.இராமர் |
| உசிலம்பட்டி | செல்லம்பட்டி வடக்கு ஒன்றியம் | குறவகுடி | போடிபா.காமராஜ் |
| உசிலம்பட்டி | சேடபட்டி தெற்கு ஒன்றியம் | அத்திப்பட்டி | சங்கீதா இரா.கண்ணன், பேனாதெய்வம் |
| 12.05.2025 திங்கள்கிழமை | | | |
| திருமங்கலம் | கள்ளிக்குடி தெற்கு ஒன்றியம் | எஸ்.பி.நத்தம் | எழும்பூர்மோ.கோபி |
| திருப்பரங்குன்றம் | அவனியாபுரம் கிழக்கு பகுதி | சிந்தாமணி | கு.வெங்கட்ராமன் |
| திருப்பரங்குன்றம் | அவனியாபுரம் மேற்கு பகுதி | மீனாட்சி நகர் | எஸ்.எஸ்.பழனி மாணிக்கம் |
| திருப்பரங்குன்றம் | திருப்பரங்குன்றம் தெற்கு ஒன்றியம் | கைத்தறி நகர், நிலையூர் | போடி. எஸ்.எஸ்.கலைச்செல்வன் |
| உசிலம்பட்டி | சேடபட்டி வடக்கு ஒன்றியம் | பள்ளப்பட்டி தாடையம்பட்டி | சேப்பாக்கம் வே.பா.பிரபாகரன் |

அதுசமயம் ஒன்றிய, நகர, பகுதி கழக செயலாளர்கள் பொதுக்கூட்டத்திற்கான ஏற்பாடுகளை செய்யும்படியும், தங்கள் பகுதியில் நடைபெறும் கழக அரசின் நான்காண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணிகளின் மாநிலமாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதிபேரூர் கழகத்திற்கு உட்பட்ட கழக நிர்வாகிகள் -மாவட்ட பிரதிநிதிகள், வட்ட வார்டு கிளைக் கழக செயலாளர்கள் நிர்வாகிகள் பிரதிநிதிகள், கழக சார்பு அணியின் மாவட்ட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், நிர்வாகிகள், பூத்முகவர்கள், பூத்கமிட்டி உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின்இந்நாள்முன்னாள்பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் மற்றும் கழக உடன் பிறப்புகள் என அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**சேடபட்டி மு.மணிமாறன்,**
செயலாளர்,
மதுரை தெற்கு மாவட்ட திமுக.

### திராவிட மாடல் அரசு பொறுப்பேற்று 5 ஆம் ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு

# அரசு போக்குவரத்துக் கழகம் சார்பில் 214 புதிய பேருந்துகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, மே 8 -

திராவிட மாடல் அரசு பொறுப்பேற்று ஐந்தாம் ஆண்டு தொடக்கவிழாவை முன்னிட்டு, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் சார்பில், 214 புதிய பேருந்துகள் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு பொறுப்பேற்று நான்காண்டுகள் நிறைவடைந்து, ஐந்தாம் ஆண்டு தொடக்கவிழாவை முன்னிட்டு, நேற்று (7.5.2025) சென்னை தீவுத்திடலில் நடைபெற்ற விழாவில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் சார்பில், 214 புதிய பேருந்துகளின் சேவையை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

தமிழ்நாட்டில் உள்ள ஏழை, எளிய, நடுத்தர மற்றும் அனைத்து பொதுமக்களுக்கு இன்றியமையாத பொதுப் போக்குவரத்துச் சேவைகளை, எட்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் வாயிலாக, குறைந்த கட்டணத்தில் அரசு வழங்கி வருவதோடு, அனைத்து கிராமப்பகுதிகளுக்கும் பேருந்து பயண வசதியை ஏற்படுத்தி மாநிலம் முழுவதும் தடையற்ற போக்குவரத்து சேவையை அளித்து வருகிறது.

பொது மக்களின் தேவைக்கேற்ப புதிய பேருந்து வழித்தடங்களை தொடங்கி வைத்தல், புதிய பேருந்துகளை அறிமுகப்படுத்தல், பழைய பேருந்துகளை புதுப்பித்தல், பேருந்து பணிமனைகளை மேம்படுத்துதல், பணிச்சுமையை குறைக்கும் விதமாக நவீன இயந்திரங்கள் அறிமுகப்படுத்தல், பணியாளர்களுக்கான ஓய்வு அறைகளை மேம்படுத்தல் போன்ற பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

இந்த சேவைகளால், மகளிர், மாணவ, மாணவியர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் உதவியாளர்கள், திருநங்கைகள், சுதந்திரப் போராட்ட வீரர்கள், தமிழ் அறிஞர்கள், மொழிப் போர் தியாகிகள், மூத்த குடிமக்கள் மற்றும் குறிப்பிட்ட இதர பிரிவினருக்கு கட்டணமில்லா பயணச்சலுகை வழங்கப்படுகிறது.

சாதாரண நகர கட்டண பேருந்துகளில் மகளிர் கட்டணமில்லாமல் பயணம் மேற்கொள்வதற்காக தொடங்கப்பட்ட "மகளிர் விடியல் பயணம் திட்டம்" மூலம் 684 கோடி பயண நடைகள் மேற்கொள்ளப்பட்டன.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற நான்காண்டுகளில், தமிழ்நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும், பயணிக்கும் பயணிகளின் வசதிக்காக, 3,727 புதிய பேருந்துகளும், 1500 பேருந்துகள் புதுப்பி க்கப்பட்டும் பயன்பாட்டில் உள்ளன.

இதன் தொடர்ச்சியாக, நேற்று (7.5.2025) சென்னை தீவுத்திடலில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்திற்கு 27 புதிய அதிநவீன சொகுசு பேருந்துகளையும், விழுப்புரம் அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 114 புதிய பேருந்துகளும், சேலம் அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 10 புதிய பேருந்து களும், கோயம்புத்தூர் அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 31 புதிய பேருந்துகளும், மதுரை அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 14 புதிய பேருந்து களும், திருநெல்வேலி அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 18 புதிய பேருந்துகளும் என மொத்தம் 214 புதிய பேருந்துகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக முதலமைச்சர் அவர்கள் இன்றைய தினம் கொடியசைத்து தொடங்கி வைத்தார்கள்.

இந்த 214 புதிய பேருந்துகளில், மகளிரின் சிறப்பான வரவேற்பினை பெற்ற "மகளிர் விடியல் பயணத் திட்டத்திற்காக" 70 நகரப் பேருந்துகளும் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பேருந்துகளின் சேவைகளை தொடங்கிவைத்த முதலமைச்சர் அவர்கள், பேருந்தில் ஏறி பேருந்தினை பார்வையிட்ட பிறகு, விடியல் பயணம் திட்டத்தில் மூலம் பயன் பெறும் பெண்களுக்காக முறையாக பேருந்து நிறுத்தத்தில் பேருந்துகளை நிறுத்தி அவர்களை ஏற்றிச் செல்ல வேண்டும் என்று நடத்துனர் மற்றும் ஓட்டுனர்களிடம் அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி. சிவ சங்கர், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி. கே. சேகர்பாபு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, ஆ.ராசா, தயாநிதி மாறன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, போக்குவரத்துக் கழகங்களின் மேலாண் இயக்குநர்கள், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு அரசின் சார்பில் காவல்துறை அணிவகுப்புடன் இறுதி மரியாதை!

# நீதிபதி ஜெ.சத்ய நாராயண பிரசாத் மறைவு - நீதித்துறைக்கு பேரிழப்பாகும்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, மே 8 -

மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி J. சத்ய நாராயண பிரசாத் அவர்களின் மறைவையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:

மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி J. சத்ய நாராயண பிரசாத் அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு பேரதிர்ச்சிக்குள்ளானேன்.

அவரைஇழந்து வாடும் அவரது குடும்பத்தி னருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாவட்ட நீதிபதியாகப் பணியாற்றிய தனது தந்தையின் வழியில் சட்டத்துறையை தேர்வு செய்து, வழக்கறிஞராகி, அரசியல் சட்டம் உள்ளிட்ட அனைத்துத் தரப்பான வழக்குகளிலும் திறம்பட வாதிடும் திறமை படைத்தவர்.

வழக்கறிஞராக நீண்ட அனுபவத்துடன் 2021இல் சென்னை உயர்நீதி மன்றத்தின் நீதிபதியாகப் பொறுப்பேற்று சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருந்தவர். நீதித்துறையில் மேலும் தனது சிறந்த பங்களிப்பை, சாதனைகளைப் படைக்க வேண்டிய தருணத்தில் நிகழ்ந்து விட்ட அவரது எதிர்பாராத மறைவு நீதித்துறைக்கும் நீதி பரிபாலன முறைக்கும் பேரிழப்பாகும்.

தமிழ்நாடு அரசின் சார்பில் அன்னாருக்குக் காவல்துறை அணிவகுப்புடன் கூடிய இறுதி மரியாதை செலுத்தப்படும். பணியில் இருக்கும் நீதிபதி ஒருவரை இழந்து வருந்தும் சக நீதியரசர்கள், வழக்கறிஞர்கள், நீதிமன்ற ஊழியர்கள் அனைவருக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# தியாகராயர்நகரில் தண்ணீர் பந்தல் திறப்பு!

சென்னை, மே. 8 –

தியாகராயர்நகர் கிழக்குப் பகுதி 131 அ வட்டச் செயலாளர் வழக்கறிஞர் எம். கிருஷ்ணமூர்த்தி விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு

சென்னை தென்மேற்கு மாவட்ட தியாகராய நகர் கிழக்குப் பகுதி 131அ வட்டம் சார்பில் தமிழக முதல்வர் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு பொதுமக்களுக்கு தண்ணீர் பந்தல் அமைக்கும் நிகழ்ச்சி இன்று (08.05.2025 வியாழக்கிழமை) 131அ வட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில்கீழ்க்கண்டஇரண்டுஇடங்களில்நடைபெறஉள்ளது. கர்ணன் தெரு, சாமியார் மடம் எதிரில், நேரம் காலை 11 மணிக்கு மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் கே.எல்.சிவானந்தம் நிகழ்ச்சி ஏற்பாட்டில் திறந்து வைக்கப்படுகிறது.

மேலும் அறிஞர் அண்ணா பொது நல மன்றம் சார்பில் ஆற்காடு சாலை, வடபழனியில் காலை 11:30 மணி அளவில் எம். விஜயகுமார் நிகழ்ச்சி ஏற்பாட்டில் திறந்த வைக்கப்படுகிறது. இந்த இரண்டு நிகழ்ச்சியில்பகுதிச்செயலாளர்கள்ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ கே.ஏழுமலை எம்.சி ஆகியோர் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு பழங்கள் மோர் வழங்கி திறந்து வைக்கின்றனர். மேலும் கோ.சு மணி உட்பட கழக முன்னணியினர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

இந்த நிகழ்ச்சியில் வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்ட பகுதி கழக நிர்வாகிகள், மகளிர் அணி இளைஞரணி உட்பட அனைத்துஅணிகளின்மாவட்டபகுதிகழக துணை அமைப்பாளர்கள் பாக முகவர், உறுப்பினர் உட்பட கழக முன்னணியினர் தவறாமல்கலந்துகொண்டுநிகழ்ச்சியினை சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வட்டச்செயலாளர் வழக்கறிஞர் எம். கிருஷ்ணமூர்த்தி அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டி.சி.விஜயன்

**மே 8 (2021)**



இளமைக் காலம் முதலே கழகப் பணியாற்றத் தொடங்கியவர்.

திருவொற்றியூர் நகரச் செயலாளராக பத்தாண்டுகளும், ஒருங்கிணைந்த திருவள்ளூர் மாவட்ட துணைச் செயலாளராகவும் கழகத்தில் பொறுப்பு வகித்தவர்.

திருவொற்றியூர் சட்டமன்றத் தொகுதியில் கழக வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்று, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்துகொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.